# தகுதி இல்லை! திறமை இல்லை!

Phone No. 4502 Regd. No. M. 5458

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (21—9—49) வெளியூர் (22—9—49) [ இதழ் 43

## தலைவராம்!

### அவர் அறிந்திராத அறிவியல்!

### அனைவரும் உழைக்கத் தயார்: ஊராள்வோர் தயாரா உழைப்பை ஏற்க?

### உழைப்பும்—பலனும் உழைப்போர் உரிமையாக வேண்டும்

### காமராஜரின் குழப்பமும்—குதர்க்கமும்!

"நம் ஜனங்களுக்கு ரொம்ப ஞாபக சக்தி குறைவு சுதந்திரம் வந்ததால் தான் இந்தக் கஷ்டமெல்லாம் என்று கூடச் சொல்லுகிறார்கள்."

"வெள்ளைக்காரன் ஆட்சியில் நாம் சுவர்க்க பூமியிலா வாழ்ந்தோம்? 150 வருட அடிமை வாழ்க்கையின் கஷ்டத்தைத் தான் நாம் இன்று அநுபவிக்கிறோம்."

"எவராலும் குறைகள் எல்லாவற்றையும் போக்கிவிட முடியாது. இப்பொழுதுள்ள பிரச்சினைகளை உழைப்பினால்தான் தீர்க்க முடியும். அதுதான் நாட்டுச் செல்வமே தவிர கரன்சி நோட்டுகள் அல்ல."

"பணமிருந்தால் கஷ்டங்களைப் போக்கிவிட முடியுமென்றால் கரன்சி நோட்டுக்கட்டுகளை ஏராளமாக அச்சடித்து உங்களுக்குக் கொடுக்க ஒரு சர்க்காருக்கு முடியும்".

"பணத்தால் எல்லாம் செய்துவிடலாமென்று எண்ணாதீர்கள்."

"சமதர்மம் என்பது நம்மில் உழைப்பைப் பகிர்ந்துகொள்வது என்று தான் அர்த்தம்."

தோழர் காமராஜர் தமிழ்நாட்டின் 'ராஷ்டிரபதி!' காங்கிரசில் தான் பெற்றிருக்கும் பதவியை இழந்துவிடாமல், என்றென்றும் தன் கையை விட்டுச் சென்று விடாமல், பார்த்துக் கொள்வதிலே மகா சமர்த்தர். இருக்கும் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதிலே, அவருக்கு இணை, தமிழ்நாட்டு காங்கிரசில் ஒருவரும் இல்லையென்றே கூறிவிடலாம். தமிழ்நாட்டுக் காங்கிரசில், தலைமைப் பதவிக்கு, காமராஜர் ஒருவருக்குத்தான் தகுதியும், திறமையும் இருக்கிறது என்னும் நிலை இருப்பதால், தமிழ் நாட்டுக் காங்கிரசிலுள்ள அறிவியல் பண்பாட்டின் தரம் எத்தன்மையிலிருக்கிறது என்பதை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். எனவே, தமிழ் நாட்டின் 'ராஷ்ட்ரபதி'யாகக் காமராஜர் இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அவர் மாகாணச் சட்டசபை உறுப்பினர். அரசியல் ஆக்க மன்றத்திலும் காமராஜர், ஒரு உறுப்பினர். இந்த இரு பதவிகளிலும் இருந்து கொண்டு, அவர் இதுவரையில், அந்த இரு சபைகளிலும், அங்கு நடைபெற்ற—பெறும்—எந்த ஒரு விஷயத்தின் மீதாவது, தம் முத்தான வாய் திறந்து, ஏதாவது ஒரு வார்த்தை பேசி இருப்பாரா? அந்தச் சபைகளில் பேசாமலிருப்பதைக் கூட, பெட்டைக்கோழி கூவியா பொழுது புலரப்போகிறது [illegible] மக்கள் மறந்து விடலாம்—மன்னித்து விடலாம். சபைகள் கூடிக் கலைந்த பிறகாவது, அங்கு நடந்த விவாதங்களின் விவரத்தை, நிறைவேறியுள்ள சட்டங்களின் உட்பொருளை,—பொது மக்களிடம் கூறவில்லையானாலும்—தன்னையும் மதித்து ஒரு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்களே, அந்த அப்பாவி வாக்காளர்களிடையாவது; பொன்னான வாய் திறந்து ஒரு வார்த்தையாவது கூறி இருப்பாரா காமராஜர்? அவ்வாறு செய்வதன்றோ, அவருடைய கடமை? அது வன்றோ வாக்காளர்களை மதித்து நடப்பதின் அடையாளம்! தங்களுடைய பிரதிநிதியிடமிருந்து, வாக்காளர்களும், அதனைத் தானே எதிர்பார்ப்பர்? என்றாவது காமராஜர், தனக்குள்ள கடமை உணர்ச்சியைத் தெரிந்து நடந்து கொண்டிருக்கிறார் என்று, எவராலாவது கூற முடியுமா என்று கேட்கிறோம்.

தனக்குள்ள பொறுப்பை—கடமையைத்—தெரிந்து நடக்கக் கற்காதவர், அவர் நிலையில் உள்ளவர்களால் புரிந்து கொள்ள முடியாத விஷயங்களிலெல்லாம் புலமை இருக்கிறது போல் பாவனை செய்து கொண்டு, நாடு சுற்றி, தனது நூற்புலமையை காட்டிக் கொள்ளாத நாள், காமராஜர் வாழ்நாளில் என்றாவது உண்டா?

'நம் ஜனங்களுக்கு ரொம்ப ஞாபக சக்திக்குறைவு.' என்று

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

## அமெரிக்காபோல் இந்தியாவும் ஆகவேண்டும்!

### எல்லாம் இருக்கின்றன: இரண்டுதான் இல்லை!

### பண்டித ஜவஹரின் ஆசையும் அவநம்பிக்கையும்!

இந்தியாவின் முதலமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு, கிழக்குப் பஞ்சாபைச் சேர்ந்த பரீத்கோட் (சமஸ்தானம்) டில் பேசுகையில்,

"நம்முடைய அரசாங்கம் மதச் சார்பற்றது, எல்லோருக்கும் சம உரிமை தருவது; ஒருசில பணக்காரர்களின் கலையைவிடப் பாமர மக்களின் நிலையை அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தாரின் நோக்கமாகும். செல்வத்திலும் படைபலத்திலும் மட்டுமின்றி, கலாசாரத்திலும், நாகரிகத்திலும் இந்தியாவை ஒரு "மாதிரி" நாடாக்கவே விரும்புகிறோம். அமெரிக்கர்களின் அந்தஸ்தை நாம் அடைய விரும்புகிறோம். அதை அடைய முடியாதபடி இடையூறாக இருப்பது ஏதாவது உண்டா? நமநாடு வளமிக்க நாடு; வசதிகளும் ஜனத்தொகையும் மிகுதியாக உள்ள நாடு. நெஞ்சுறுதியும் முன்னேற்ற ஆவாவும் இருக்குமாயின் உலகில் நாம் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை" என்று பேசியுள்ளார்.

பண்டிதரின் சர்க்கரை மூலாமிட்ட பேச்சை வைத்துக்கொண்டு இன்றைய காங்கிரஸ், ஆட்சியின் போக்கை அதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். சொல்வேறு செயல் வேறாகக் காட்சியளிப்பதை எவரும் அறியலாம்.

பண்டிதர் தம் ஆசையை—அல்லது கேட்போர் விருப்பத்தை மதிக்கும் முறையில் இவ்வாறெல்லாம் பேசலாம். ஆனால் நம் மாகாண அரசாங்கத்தை மட்டுமாவது எடுத்துக் கொண்டாலும் போதுமே. மதச் சார்பற்ற நாடு என்று கூறிய பண்டிதரின் கா ஈரம் உலரா முன்பே, சென்னைப் பல்கலைக் கழகக் கல்வி அறிஞர்கள் கூட்டத்தில், பள்ளிக்கூடங்களில் மதக்கல்வி போதனை இருத்தல் வேண்டுமென்று ஒருமுப்புரி நூலார் தீர்மானம் கொணர்ந்துள்ளார்.

மதச்சார்பற்ற அரசாங்கத்தின் ஆதரவைப் பெறும் கல்வி நிலயங்களில் மதக் கல்வி போதிக்கப்படலாமா? அதற்கு இடந்தான் தரலாமா?

எல்லோருக்கும் சம உரிமை தரும் ஆட்சி நடப்பதாகப் பண்டிதர் கூறும் இந்த நாட்டிலே [illegible] நிலை விடர்கள்-தீண்டாதவர்கள் என்ற இனம் இன்னும் இருந்து கொண்டிருக்க விடலாமா? அந்தப் பெயர்களை நீக்கி விட்டு, அவர்களும் மற்ற மக்களுடன் சரி நிகர் சமானமே என்ற நிலையில் வாழ வகை செய்து, அது நாட்டின் பிற மக்களால் எவ்வகையிலும் அலட்சியம் செய்யப்படாத முறையில் கடும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டாமா? மதுவிலக்கைவிட, இத்தொண்டு மகத்தானதல்லவா?

சம உரிமை தரும் ஆட்சி நடைபெறும் இந்நாட்டிலே ஒரு கூட்டத்தார் தம்மை உயர்ந்தவரென்று கூறிக்கொண்டு, செத்துப்போன மொழியில்-என்றோ,எவரோ வெறிபிடித்து எழுதிய சில உதவாக்கரை நூல்களை-அதற்காதாரமாகக் காட்டிக்கொண்டு திரிந்து, அநியாயமாக நாட்டு மக்களின் உரிமைகள் பலவற்றைத் தாங்களே ஏகபோகமாக அநுபவித்துக்கொண்டு வரும் நிலைமை நாட்டிலே நடமாட விட்டிருக்கலாமா? அப்படியே ஒரு கூட்டம் உயர்வென்றும், மற்றவர் தாழ்வென்றும் கூறி வகுப்புத் துவேஷத்தை உண்டு பண்ணிவரும் செயலை அடியோடு வேரறுத்து, அவர்களை உயர்ந்தோராகவும், பிறரைத் தாழ்ந்தோராகவும் ஆக்கி வைக்க ஆதாரம் கூறும் ஆபாச நூல்களை அழித்தொழித்து நாட்டில் சமத்துவ நிலையைப் பரப்பக் கடும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்க வேண்டாமா? எடுத்துக் கொண்டாரா பண்டித நேரு?

இது தேசிய மொழிப் பிரச்சினையை விட மிக மிக முக்கியமானதல்லவா?

[illegible] பணக்காரரின் கலையை விடப் பாமர மக்கள் நிலையை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ள அரசாங்கம் நடைபெறுகிறதென்று பண்டிதர் கூறுவது உண்மை யென்றால், பணக்காரர்களின் செல்வம் கொழிக்கும் செயல்களுக்கு அரசாங்கம் ஆதரவு காட்டி ஏழைத் தொழிலாளர்களின் உரிமைகளை அடக்கு முறைகள் மூலம் ஒழிக்க அரசாங்கம் முன் வந்தது எதற்காக?

சட்ட சபைகளும் நகர சபைகளும், ஸ்தல ஸ்தாபனங்களும் செல்வம் கொட்டும் நிலையங்களாக சிலரால் ஆக்கிவைக்கப்பட்டு, அவற்றில் பெர்மிட், லைசென்ஸ், குத்தகை உரிமைகளுக்கான வேட்டைகள் நடந்தப் பணக்காரர்களுக்கும், அவர்களுக்கு உதவியாகவிருந்து பணக்காரர்களாகும் சிறு உறுப்பினர்களுக்கும் இடமளித்துக்கொண்டிருப்பானேன்? இவ்வணம் இல்லை யென்றால் மேற்கண்ட பதவிகளில் இருக்கும் பலருடைய முன்னை வாழ்க்கை

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

## தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் தோழர்கள்!

நாட்டுக்கு இப்போதைய நிலையில் எது முக்கியமாகத் தேவைப்படுகிறது? என்பதை அறியாத நிலையில் நாட்டின் தலைவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை நன்குணர்ந்த விஞ்ஞானி சர் சி. வி. இராமன், "இந்தியை நாட்டுக்குப் பொது மொழியாக்குவதா? இல்லையா? இந்தியை தேவநாகரியில் வைப்பதா? வேறு லிபியில் வைப்பதா? என்னும் விவாதத்திற்கு நாட்டில் இப்போது அவசியமுமில்லை; தேவையுமில்லை, நாட்டிலுள்ள இஞ்சினியர்கள், விஞ்ஞானிகளாகிய அறிஞர்கள் ஒன்றாக ஒரு வட்ட மேஜை மாநாடாகக் கூடி, நாட்டின் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முயன்றால் பல சங்கடங்கள் எளிதில் தீர்ந்து, நாடு முன்னேற்றமடையும்" என்று கோவை இஞ்சினியரிங் விஞ்ஞானிகள் கூட்டத்தில் பேசினார்.

சர் சி.வி. இராமன் கூறறு நாட்டுக்குச் சியாயமான து.நாட்டுக்கு இன்றியமையாது தேவைப்படும் ஜீவாதாரப் பிரச்சினைகள் பலவற்றைக் கவனிக்காமல் விட்டு, அவசியமில்லாத மொழிப் பிரச்சினைக்காக வாதப்பிரதிவாதங்கள் செய்து அ. இ. சபையின் காலத்தையும், பொதுமக்கள் பணத்தையும் விரயமாக்குவதென்றால், அறிவுடையோர் எவரும் இச்செயல்களை ஆதரிக்க முடியாதல்லவா? ஆனால், அறிவுடையோர் கருத்தையோ, ஒத்துழைப்பையோ கோரும் நிலையில் நாட்டரசியலமைப்பு மன்றங்களோ, நாட்டாட்சித் தலைவர்களோ இல்லையே! நம் நாட்டின் நிலைமை இவ்வகையில் போய்க் கொண்டிருப்பது அறிஞர் உள்ளத்தை உருக்கும் நிலையில் தானிருக்கிறது.

# மாலை மணி

சென்னை   21—9—49   செவ்வாய்க்கிழமை


# “பாரத்” யாருக்கு வேண்டும்!

“இந்தியா” என்பது அந்நியர்களால் அழைக்கப்பட்ட பெயர்! ஆகவே அது கூடாது! அதற்கு வேறு பெயர் இட்டாக வேண்டும்! அதுவும் வடவரின் சொந்த மொழியிலேயே இருக்கவேண்டும்! என்ற முயற்சி, இந்தி வெறி ஏகாதிபத்ய மனப்பான்மைகொண்ட அ. நி. சபையால் எடுத்துக் கொள்ளப்பட்டு, “பாரத” என்பது மாற்றுப் பெயராகக் கொள்ளப்பட்டிருக்கிறது இப்பொழுது!

சமஸ்கிருதம் இந்தியின் தாய்மொழியாம்! அதிலே ஒரு பெயர் தேடினார்களாம்! ‘பாரத்’ கிடைத்ததாம்! அது வேதகாலந்தொட்டு வேதிய குலத்தினரால் மொழியப்பட்டு ‘பரிசுத்தத்தன்மை’ யோடு இருந்து வருகிறதாம்! அந்நியர் கொடுத்த மொழியை அகற்றி, ‘சொந்த’ மொழியிலே பெயரிட்டார்களாம்! அவ்வளவு ஆர்வம் அவர்களுக்கு! அதாவது இந்தி மொழி வெறியர்களுக்கு! அவர்கள்—வடநாட்டு இந்தி ஆதரவாளர்கள், சொந்த மொழியிலே கொள்ளும் ஆவத்தை, நாம் தடுக்கவில்லை—மாறாகப் பாராட்டுகிறோம்.

அவர்களுடைய மொழி ஆர்வம், நம்முடைய - திராவிட இனத்தவருடைய-மொழி ஆர்வத்தைக் குலைக்காமல்-குறைக்காமல்-ஊறு செய்யாமல இருக்க வேண்டாமா?

வெள்ளைக்காரன் துப்பாக்கி முனையால் வென்று நிலை நாட்டிய, பரந்த நிலப்பரப்பு முழுவதுக்கும் “இந்தியா” என்று பெயர் கொடுத்தான். அதற்கு முன்பு சிந்துநதி தீரமும், அதனை ஒட்டிய வட நாட்டுப் பகுதியுமே மேலை நாட்டினரால் “இந்த்” என்று அழைக்கப்பட்டது. தென்னாட்டுப் பகுதிகள் மொழிவழிப்படியும், ஒன்று சேர்த்துக் காணும் போது “திராவிட” என்றும் அழைக்கப்பட்டன. வெள்ளைக்காரனின் துப்பாக்கி முனையே, அனைத்துப்பகுதியையும் சேர்த்து இந்தியா என்று உருவாக்கிக் காட்டியது.

இந்தியா என்ற பெயருக்குள்ளே அடங்கிக் கிடந்த பர்மா, பிரியும்போது, சொந்தப் பெயரோடு பிரிந்து விட்டது.

1947 ஆகஸ்டு பதினைந்தில் பாகிஸ்தான் பிரியும்போது, சொந்தப் பெயர் ஒன்றினைச் சொந்த மொழியில் ஏற்படுத்திக் கொண்டு பிரிந்து விட்டது.

அந்த இரு நாடும் அந்நியர் அழைத்த பெயரை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லாமல், சொந்தப் பெயரை இட்டுக்கொள்ளவே ஆவலுற்றன.

எஞ்சிய பகுதியைக் குறித்து நிற்கும “இந்தியா” இப்பொழுது எடுபடுகிறது, சொந்தப் பெயரைச் சூட்டவேண்டும் என்ற ஆர்வத்தால்! முயற்சி மிகவும் பாராட்டத் தக்கதுதான்! “இந்தியா” என்ற பெயரில் எஞ்சி நிற்கும் நிலப் பகுதிக்கு “பாரத்” என்பது சொந்தப் பெயர் என்ற முறையில் சூட்டப்படுகிறது! அந்த இடத்தில்தான் “தமிழகத்தை”ச் சேர்ந்தவர்கள்—“திராவிடத்தை”ச் சேர்ந்தவர்கள் ஆகிய நாம், அழுத்தந்திருத்தமாகக் கண்டிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆரிய வர்த்தத்திற்கு வேண்டுமானால், “பாரத்” பொருத்தமான—சொந்தப் பெயராக-அமைந்திருக்கலாம். அது நமக்கு — தமிழர்களுக்கு—திராவிடர்க்கு எப்படிப் பொருத்தமாகும்! “இந்தியா” எப்படி ஆரிய வர்த்தத்திலே வாழ்வோர்க்கு, அந்நிய மொழியாகப்படுகிறதோ, அதுபோலத்தான் தமிழகத்திலே—திராவிடத்திலே-வாழ்வோர்க்கு “பாரத” அந்நிய மொழியாகும். அவர்களுக்கு எப்படிச் சொந்த மொழியிலே பெயர் வைத்துக்கொள்ள வேண்டும் என்று, உணர்ச்சி துடிதுடிப்புக் கொள்ளுகிறதோ, அதுபோலத்தான், நமக்கும் சொந்த மொழியிலே சொந்த நாட்டின் பெயர் அமையவேண்டும், என்று நாம் கருதுகிறோம்- ஆவலுறுகிறோம்- முயலுகிறோம்- பாடுபட்டு வருகிறோம்.

சமஸ்கிருதம், திராவிடர்க்கு-தமிழருக்கு அந்நியமொழியே! அது கொடுக்கும் “பாரத்” என்பதும் அந்நிய மொழியே! “இமிழ் கடல்வரைப்பில தமிழகங் கேட்ப” என்று தமிழ் நாட்டைத் தமிழகம் என்றுதான் அழைத்தார்கள் சங்க காலத்தவர். தமிழ் வழங்கும் பகுதிக்குத் “தமிழகம்” என்பதுதான சொந்தப் பெயராகும். அதுபோல தெலுங்கு மொழி வழங்கும் பகுதி “ஆந்திரம்” என்றும், கன்னட மொழி வழங்கும் பகுதி “கர்நாடகம்” என்றும், மலையாளம் வழங்கும் பகுதி ‘கேரளம்’ என்றும் அவரவர் விருப்பப்படி அழைக்கப்படலாம். இவை ஐந்தும் சேர்ந்து, திரு இடம்-அழகிய இடம்- என்ற பொருள்படும் “திராவிடம்” என்றே அழைக்கப்பட வேண்டும். எனவே ‘பாரத்’, தமிழகத்துக்கோ, திராவிடத்துக்கோ எவ்வகையிலும் பொருந்தாது-பொருள்படாது - பெயரிட்டழைக்கவும் கூடாது.

தன்மான உணர்ச்சி தமிழர்களிடத்தில், திராவிடர்களிடத்தில் சிறிதளவேனும் இருக்குமேயானால், “பாரத்” என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் - ஏற்றுக் கொள்ளவுங் கூடாது.

இந்தி ஏகாதிபத்ய வெறியர்கள் இந்தியையும் திணித்தார்கள்—இந்தி எண்களையும் புகுத்த முயன்றார்கள்-இந்தி மொழிப் பெயரையும் பிற மொழி நாடுகள் அனைத்திற்கும் விடாப் பிடியாய்ச் சூட்டி விட்டார்கள்! இன்னும் என்ன என்ன செய்வார்களோ? எதையும் அவர்கள் செய்வார்கள்! எதையும் அவர்கள் செய்ய முடிகிறது, தென்னாட்டிலிருந்து பிரதிநிதிகளாக அ. நி. சபைக்குச் சென்றோர் பலரும் ‘அனுமார்களா’க - ‘சுக்ரீவர்களா’க- ‘அடியபாதங் கண்டவர்களா’க இருப்பதால்! கருத்துப் புரட்சி ஏற்படும் கால வெள்ளமே இவற்றிற்கு மாற்றம் காணும்-காண வேண்டும்!

“பாரத்” யாருக்கு வேண்டும்!

## கழகக் கொடி

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியை, அமைப்புத் திட்டக் குழு கூடி, முடிவு செய்து, மாகாண மாநாட்டின் முன் கொண்டு வந்து ஏற்றுக் கொள்ளச் செய்து, முறையாகக் கையாளத் தொடங்கும் வரையில், தற்காலிகக்கொடியாகக் கீழே குறிப்பிடப்படும் முறையில் அமைத்துக் கொள்ளும் படியாகக் கழகத் தோழர்களையும் கிளைக் கழகங்களையும் கேட்டுக் கொள்கிறேன்.



நீண்ட சதுர வடிவத்தில், மேல் சரிபாதி கறுப்பு நிறமாகவும், கீழ்ச் சரிபாதி சிகப்பு நிறமாகவும் அமைந்திருக்க வேண்டும்.

கொடியின் அளவு (2 : 3) அகலம் இரண்டு பங்கும், நீளம் மூன்று பங்கும இருக்க வேண்டும். அகலம் 2 அடியானால் நீளம் 3 அடி இருக்க வேண்டும் என்பதாகும்.

கறுப்பு—அரசியல், பொருளாதார, சமுதாய வாழ்வில் உள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும அறிகுறியாகும.

சிகப்பு—அம் மூன்று துறையிலும உள்ள இருண்ட நிலையைப் போக்கி, ஒளிநிலையை உண்டாக்க வேண்டும் என்பதைக் காட்டும் அறிகுறியாகும்.

இருண்ட நிலையை-ஒளிநிலை, அழித்துக் கொண்டு வரவேண்டும-அழித்துக் கொண்டு வருகிறது, இருண்ட வானின் அடியில் தோன்றி எழும்பும இளம்பரிதி ஒளிபோல என்ற கருத்துடன், கறுப்பு மேலும், சிகப்பு கீழும் வைக்கப்பட்டுள்ளன.

இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தற்காலிகக் கொடியாக இருந்து வரும.

சி. என். அண்ணதுரை,<br>
பொதுச்செயலாளர்,<br>
திராவிட முன்னேற்றக்கழகம்

## திராவிட முன்னேற்றக்கழக பிரசாரக் குழுக் கூட்டம்

சென்னை, செப். 19—

நேற்று 18—9—49 ஞாயிறு காலை 11-30 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழக பிரசாரக் குழுக் கூட்டம் கழக அலுவலகத்தில் நடை பெற்றது.

பிரசாரக் குழு செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள்:—தோழர்கள் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், இரெ. இளம்வழுதி, கே. கோவிந்தன், சி. பி. சிற்றரசு, என். எஸ். இளங்கோ, ஈ. வெ. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மா. இளஞ்செழியன், தி. கோ. சீனிவாசன், மு. கருணாநிதி, காஞ்சி கல்யாணசுந்தரம், ஏ. சித்தையன், எஸ். ஆர். சுப்பரமணியம், முருகு. சுப்பிரமணியம், ஆர். எஸ். தங்கப்பழம், த. மா. திருநாவுக்கரசு, சி. வி. எம். அண்ணமலை, எஸ். நெடுமாறன், எஸ். அப்பாவு ஆகியோர் வந்திருந்தார்கள்.

பல ஊர்களிலும் துவக்க விழாச் சொற்பொழிவுகளை ஆற்றுவதற்குக் கீழ்க்கண்டபடி பிரசாரகர்களை அனுப்பி வைப்பதென்று தீர்மானிக்கப் பட்டது. இதுவரை முடிவு செய்யப்பட்ட ஊர்களும் பிரசாரகர்களும், நாட்களும் வருமாறு:—

### 16-10-49

| | |
|---|---|
| கோவை:— | சி. என். அண்ணாதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம், பெத்தாம்பாளையம பழனிச்சாமி. |
| திருச்சி:— | இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு. |
| விருதுநகர்:— | என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி. |
| மதுரை:— | என். ஜீவரத்தினம், டி. கே. சீனிவாசன். |
| தூத்துக்குடி:— | காஞ்சி. கல்யாணசுந்தரம், மு. கருணாநிதி, தஙகப்பழம். |
| வேலூர்:— | சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன். |
| குறிஞ்சிப்பாடி:— | காஞ்சி. மணிமொழியார், இரெ. இளம்வழுதி. |
| தஞ்சை:— | ஈ. வெ. கி. சம்பத், என். எஸ். இளங்கோ. |
| காஞ்சிபுரம்:— | கே. அன்பழகன், சத்தியவாணிமுத்து. |
| திண்டுக்கல்:— | எஸ். கே. சாமி, தங்கப்பழம். |

### 17-10-49

| | |
|---|---|
| சேலம்:— | சி. என். அண்ணாதுரை, ஏ. சித்தையன். |
| கோவில்பட்டி:— | காஞ்சி. கல்யாணசுந்தரம், மு. கருணாநிதி. |
| புதுக்கோட்டை:— | என். எஸ். இளங்கோ, என். ஜீவரத்தினம். |
| மாயவரம்:— | ஈ. வி. கே. சம்பத், இரெ. இளம்வழுதி டி. கே. சீனிவாசன். |
| திருப்பத்தூர்:—(வ.ஆ.) | கே. ஏ. மதியழகன், சி. பி. சிற்றரசு. |

### 18-10-49

| | |
|---|---|
| உடுமலைப்பேட்டை:— | சி. என். அண்ணாதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம். |
| பட்டுக்கோட்டை:— | என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஈ. வெ. கி. சம்பத். |
| திருவண்ணாமலை:— | சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன். |

### 19-10-49

| | |
|---|---|
| பொன்மலை:— | என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி. |

## N. S. கிருஷ்ணன், T. A. மதுரம்

### தெரிவிக்கும் நன்றி

எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி 13—9—49 யன்று நாகர்கோயிலில் நடைபெற்ற மகாத்மா காந்தி ஞாபகார்த்த ஸ்தூபியின் திறப்பு விழா வைபவத்தில் முக்கிய பங்கெடுத்து சிறப்பித்த தலைவர்களுக்கும், கலைஞர்களுக்கும், விழாவுக்கு விஜயம் செய்த பத்திரிகையாளர்களுக்கும், அன்பர்களுக்கும், தாய்மார்களுக்கும், ஆசித் தந்திகள், கடிதங்கள் அனுப்பித்தந்த பெரியார்களுக்கும் எல்லா வகையிலும் உழைத்து விழாவை வெற்றிகரமாக நடத்தித்தந்த அனைவருக்கும் எங்கள் நன்றியறிதலைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்புள்ள

சென்னை<br>
17—9—49

N. S. கிருஷ்ணன்<br>
T. A. மதுரம்